**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS.79/2023**

பெயர் : மோகன் (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 16.02.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ராமமூர்த்தி என் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். ராமமூர்த்திக்கு சொந்தமான சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். மணிவண்ணன் தான் தாவா சொத்தின் உரிமையாளா என்று வழக்கில் கட்சி சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். வழக்கு நிலுவையில் ராமமுர்த்தி இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராமமூர்த்தி உயிருடன் இருக்கும் போதே மணிவண்ணனை சேர்க்க மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். மணிவண்ணன் அவருக்கு சொந்தமான இடம் 7 செண்ட் என்று வழக்கில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். மணிவண்ணன் பழனிக்குமார் என்பவரிடம் 2004 ல் 1694 சதுரடி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பழைய சர்வே எண் 170/2 என்றால் சரிதான். அவர் வாங்கிய சொத்துக்கு கிழக்கே எங்கள் வீடு உள்ளது. எங்கள் இடம் பூர்விகமானது என் தாத்தாவும் என் அப்பாவும் எனக்கு செட்டில் மெண்ட் செய்து கொடுத்துள்ளார்கள். 2014 ல் செட்டில் மெண்ட் செய்து கொடுத்துள்ளார். எனக்கு செட்டில் மெண்ட் கொடுத்தது 8 செண்ட். மணிவண்ணன் வீட்டு மனைக்கு கிழக்கு, ராமகிருஷ்ணன் வீட்டு மனைக்கு மேற்கு, தெருவிற்கு வடக்கு, 169/2 க்கு தெற்கு. செட்டில் மெண்ட் ஆவணத்தை வழக்கில் போட்டுள்ளேன். நான் சொல்வது அதுபோல் செட்டில் மெண்ட ஆவணம் எதுவும் வழக்கில் தாக்ககல் செய்யவில்லை என்றால் சரிதான். 169/2 க்கும் என் செட்டில் மெண்ட் இடத்திற்கும் இடையே புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். அதன்கு என் தந்தை பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள். புறம் போக்கு இடத்தை நான்கெல்லையில் காட்டவில்லை. கிரயம் வாங்கிய இடமும் புறம் போக்கும் சேர்த்தால் 8 செண்ட் என்றால் சரியல்ல பட்டா இடம் மட்டுமே 8 செண்ட். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. செட்டில் மெண்ட் ஆவண்ததில் நான்கெல்லை தவறாக உள்ளதால் தான் அதை வழக்கில் தாக்ல செய்யவில்லை என்றால் சரியல்ல. மணிவண்ணன் கிரயம்

பெற்ற இடத்திற்கு வடக்கே புறம் போக்கு உள்ளது என்றால் சரிதான். புறம் போக்கிற்கு வடக்கே நஞ்சை நிலம் உள்ளது என்றால் சரிதான். என் தந்தை கிரயம் பெற்ற சொத்துக்கு மணிவண்ணன் மீது சீர்காழி DMC யில் OS. 120/2005 வழக்கு போட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் அப்பாவின் சொத்தை மணிவண்ணன் ஆக்கிரமிக்க முயல்வதாக வழக்கு போட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தந்தை அவருக்கு சொந்தமான சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்று சொல்லி உள்ளார் என்பது தெரியாது. அந்த வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. மணிவண்ணன் அந்த தீர்ப்பின் மீது மேல் முறையீடு செய்தார் என்றால் சரிதான். அந்த மேல் முறையீடு அனுமதிக்கப்பட்டு கீழமை நீதிமன்ற தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காகஒத்திவைக்கப்படுகிறது.**